# அக்கரை



அக்கரைப்பாக்கியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரை

(கவிதைகளும், மெல்லிசைப் பாடல்களும்)

## அக்கரைப்பாக்கியன்



வெளியீடு:

**லக்ஷ்மி கலாமன்றம்**

அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கறை

(கவிதைகளும், மெல்லிசைப் பாடல்களும்)

ஆசிரியர் — அக்கிரைப்பாக்கியன்.

அட்டை ஓவியம் — வேலு சண்முகநாதன்.

வெளியீடு — லக்ஷ்மி கலாமன்றம்,
அக்கரைப்பற்று.

அச்சு — கத்தோலிக்க அச்சகம்,
18, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

முதற்பதிப்பு — ஐப்பசி 1978.

விலை: 4-50.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தயாள குணங்கொண்டு
தாரணியில் எனைக்காக்கும்
என்றன் தாய்க்கு
இந்நூல் சமர்ப்பணம்.

— அக்கரைப்பாக்கியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

பல ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட எங்கள் ''லக்ஷ்மி கலாமன்றம்'' கலையின் வளர்ச்சிக்காகவும், சமூக நலனிற்காகவும், அன்றிலிருந்து, இன்று வரை எண்ணற்ற ஆக்கப்பணிகளை மேற்கொண்டு வருவதை எவரும் மிக எளிதில் மறந்துவிட முடியாது.

அக்கரைப்பற்று என்னும் அருமைமிகுந்த கிராமம், கலை, இலக்கியம், சமயம் போன்ற துறைகளில் இன்று முன்னின்று ஒளிர்வதற்கும், பல கலைஞர்கள் தத்தம் திறமைகளை வெளி உலகிற்குக் காட்டுவதற்கும் எங்கள் ''லக்ஷ்மி கலாமன்றம்'' மேற்கொண்ட முயற்சிகள் எண்ணில் அடங்காதவை.

தற்பொழுது எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தி, அவர்கள் திறமையை மென்மேலும் வெளிக்கொண்டுவர வேண்டுமென்னும் ஒரு அவாவினால் தான் இந்த ''அக்கறை'' என்னும் கவிதை நூலை நாங்கள் வெளியிடுகின்றோம். நூல் வெளியீட்டுத் துறையில் இது எங்கள் கன்னி முயற்சி. பத்திரிகை, வானொலி வாயிலாக இன்று அறிமுகமாகிவரும் கவிஞர் ''அக்கரைப்பாக்கியன்'' அவர்களின் ''அக்கறை'' என்னும் கவிதை நூலினை, எங்கள் மன்றத்தின் முதல் வெளியீடாக வெளியிட்டுவைப்பதில் நாம் மிகுந்த சந்தோசம் அடைகின்றோம்.

கவிஞர் ''அக்கரைப்பாக்கியன்'' அவர்கள் சமுதாயத்தின் அதளபாதாளம்வரை சென்று, தான் கண்டெடுத்த குறை, நிறைகளை பாமரரும் படித்து எளிதில் புரிந்துகொள்ளும் விதத்தில் அழகான கவிதைகள்மூலம் எங்களுக்கு இங்கே உணர்த்தி இருக்கின்றார். இவற்றைப் படித்து, அதன்வழி ஒழுகுதல் நம் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

''அக்கறை'' என்னும் இந்த கவிதை நூலை வெளியிட எங்கள் மன்றம் எடுத்த ஊக்கத்தில், வாசகப் பெருமக்களும் மிகுந்த அக்கறைகொண்டு, மென்மேலும் இதுபோன்ற நற்பணிகளில் எங்கள் மன்றம் ஈடுபட நிறைந்த ஆதரவு தரவேண்டுமென அன்பாய் வேண்டுகின்றோம்.

**லக்ஷ்மி கலாமன்றம்.**

பதிவு இல: அம்-13/7-4-73.
அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னூலாசிரியரும் எழுத்தாளருமான

# அ. ஸ. அப்துஸ்ஸமது (பி. ஏ. சிறப்பு)

அவர்கள் உவந்து அளித்த

## அணிந்துரை

பாரதியின் கவிதை யுகத்தில் அவன் விழைந்த சமுதாய அமைப்பையும், தனிமனிதப் பண்புகளையும், தேசிய நலன்களையும் பொருளாக்கிக் கவிதை பாடுவதில் பிற்காலக் கவிஞர்கள் தம் பங்களிப்பைச் சிறப்பாக ஆற்றிவருகின்றனர். இந்த சகாப்தத்தில் பாரதியை அடிமீறிச் செல்லும் திருப்பங்கள் இவர்களுக்கு ஏற்படவும் மாட்டாது. ஆனுல் மனித வாழ்வின் அவலங்களையும், சமுதாயச் சீர்கேடுகளையும், மனித தேவைகளையும், உணர்வின் தாக்கங்களையும் பாடும்போது, ஒரு ஆவேசம், ஒரு வெறுமை, ஒரு சோகம், உணர்வு நிலைகளின் சங்கமம் ஆகிய தன்மைகள், பாரதியை விடவும், இக்காலக் கவிஞர்களின் ஆக்கங்களில் மேலோங்கி நிற்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இவ்வகையில் சிறப்பான கவிதைகளைச் செய்பவர்கள் ''உணர்ச்சிக் கவிஞர்கள்'' என்றும் பாராட்டப்படுகின்றனர். ஒன்பான் சுவை கவிதைகளில் எப்பொழுதுமே கையாளப்பட்ட ஒன்று தான். உணர்ச்சி என்று நாம் இங்கு குறிப்பிடுவது, சுவைகளின் பேதங்களையல்ல, மனித வாழ்வின் மனே உணர்வுகளையே. பாரதிதாஸனின் கவிதைகளின் விசேட சிறப்பே, சமுதாயம், மொழி முதலாம் அம்சங்கள் பற்றிய அவருடைய உணர்வலைகள்தான். கண்ணதாஸன் வாழ்வின் வெறுமைபற்றிய தத்துவப் பாடல்களை மக்கள்முன் வைத்து சோக உணர்வுகள் மூலம் அவர்களைத் தன்பக்கம் ஈர்த்து விடுகிருர். காசி ஆனந்தனின் கவிதைகள் இன எழுச்சிக் கனல் கக்கி நிற்கின்றன. புரட்சிக்கமாலின் சமுதாய நோக்குகள் ஆக்ரோஷம் பொருந்திய அழைப்புகளாக இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன? இன்றைய உலகின் வேகமான மாறுதல்களும், அலைமோதும் பிரச்சனைகளும், சமுதாயச் சீரழிவுகளும் சிந்திப்பவர்களின் உணர்ச்சி அலைகளை துரிதமாகச் சுழலச் செய்கின்றன.

இளம் கவிஞர் அக்கரைப்பாக்கியன் நல்ல கவிதையாற்றல் உள்ளவர். வானொலியிலும், பத்திரிகைகளிலும் இவரது பாடல்கள் உவப்போடு இடம்பெற்றுவருகின்றன. இவர் கவிதைகள்மீது கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அக்கறை'யை இந்நூல் வாயிலாக நாம் காண்கிறோம். இவருடைய கவிதைகளைப் படித்தபோது மேற்கூறிய கருத்துக்கள் எனக்கு ஏற்பட்டன. இந்த சகாப்தத்தின் உணர்ச்சிக் கவிஞர்களுள் ஒருவராக இவரும் சேர்கிறார்.

இறைவன் என்னும்போது ஆத்மீக உணர்வே எவருக்கும் ஏற்படும். அவன் தாள் அடைதல்பற்றியே எவரும் பேசுவர். ஆனால் இன்றைய உலகில் நீதியும், தர்மமும் நிலைபெற அவனைப் பிரார்த்திக்க வேண்டியிருக்கிறது. உலகம் செவ்வனே திகழ்தற்கே இறைவனருள் முதற்கண் தேவை. கவிஞரும்

''சத்தியம் என்றும் நிலைத்திட வேண்டும்
சமத்துவம் வேரூன்றி வளர்ந்திட வேண்டும்
புத்தியாய் புவிதனில் மாந்த ரெல்லாரும்
புன்மைகள் களைந்து வாழ்ந்திட வேண்டும்.''

என்று இவ்வாறு பிரார்த்திக்கின்றார். இந்த வாழ்வில் சத்தியம் நிலைத்து புன்மைகள் மாறினால்தானே நாம் மறுமையில் நலன்பெறலாம்.

தமிழைப் பாடும்போது கம்பனையும் வள்ளுவனையுமே எவரும் ஏற்றிப்பாடுவர். இவ்வாறு கேட்டுப்பழகிய நமக்கு கவிஞர் அக்கரைப் பாக்கியன் ஒரு இனிய பெயரைப் புதிதாகத் தருகிறார்.

''நாவலரின் நெஞ்சினிலே விரிவாகிறாய் – நீ
நக்கீரன் சொல்லிற்குப் பரிவாகிறாய்.
தாவிவரும் குழந்தையிலே உயர்வாகிறாய் – என்
தாய்த்தமிழே நீ எந்தன் உயிராகிறாய்.''

என்று பாடும்போது நாவலன் நெஞ்சில் நிலைத்த தமிழ் என்றும், குழந்தையின் மழலையில் வாழுந் தமிழ் என்றும் கூறும்போது இரு வேறு இன்ப உணர்வுகள் எமக்கு ஏற்படுகின்றன.

''சீதனச் சிறை'' என்ற மற்றோர் கவிதையிலே ''சீதனப் பேய்'' என்று அதனை ஆவேசத்துடன் விழிக்கும் கவிஞர் மங்கையரிடம் உள்ள பசீதனம் எவை என்பதை மிக அழகாகக் கூறுகிறார்.

''ஆதனமாக மங்கையர்க் கிங்கே
அருங்குணம் நான்கும் இருந்திடும்போது
சீதனம் சீதனம் என்றே இழுப்பது
சிந்தை யற்றவர் செய்கை யன்றோ.''

என்று வரும் அடிகள் எவர்தம் சிந்தையையும் தொட்டு நிற்கும் நீர்மையது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பும் அதன்வழி தோன்றிய கற்பு நெறியும் ஒரு பெண்ணுக்குள்ள செல்வமாகும். இதுவே தன் மானமுள்ள ஒரு ஆடவன் ஏற்கும் ஸ்ரீதனமாகும் என்பதைக் கவிஞர் இடித்துரைக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அன்னையின் மடியில் நானிருந்தேன்'' என்று தொடங்கும் 'இன்பமடா!' என்ற கவிதை ஆசிரியருடைய கற்பனை ஆற்றலையும், வாழ்வின் கோலங்கள் பற்றிய அவருடைய நோக்கையும் காட்டுவன. அனுபவம் இன்னும் முதிரப்பெற்றால் இவர் சிறந்த தத்துவ நோக்குடைய கவிஞராகத் திகழ்வார் என்பதை இக்கவிதை எடுத்துக்காட்டுகிறது.

இதேபோன்ற தத்துவ உணர்வுள்ள மற்றோர் கவிதைதான் நூற் தலைப்புக்குரிய ''அக்கறை''. இதனைச் சுவைத்துப்பாருங்கள்.

''காதல் மலர்வதில் கண்களுக் கக்கறை
கவலை மலர்வதில் கவிதைக்கு அக்கறை
மழை பொழிவதில் முகிலுக்கு அக்கறை
மமதை அழிவதில் கீதைக்கு அக்கறை
ஆனால்
பசியென்று வந்து பகல்தோறும் கத்தினால்
புசி என்று சொல்ல யாருக்கு அக்கறை?''

என்று கேட்கும் கவிஞருடைய பார்வை, வெறும் காதல், கவலை, மமதை போன்ற உணர்வு நிலைகளிலிருந்து மனித வாழ்வின் ஹீன நிலைநோக்கிச் செல்வதை நாம் காணும்போது, இங்கே கவிதையில் ஒரு முழுமையைக் காண்கிறோம்.

சாதியாம் சாதி, தம்பிக்கு என்னும் கவிதைகளில் சாதி வேற்றுமையையும், மதுவின் தீமையையும் நன்கு எடுத்துக்காட்டும் கவிஞர், அளவுடன் பெற்று அழகுடன் வாழ்வோம் என்ற கவிதையில் கூறும் பொருள் புதுமையானது. 'சாவதற்கோ பிள்ளை தவிப்பதற்கோ இப்பேறு' என்று கூறிய பாரதிதாஸனை நினைவுகொள்ள வைக்கிறது. இப்பொருள்கள் சமூகத்திற்குப் பெரிதும் நலன் பயக்கத்தக்கதாகும்.

''ஈழம் எமக்கினிய நாடு — அதன்
இனிமை தனையறிந்து பாடு''

என்ற பல்லவியோடு தொடங்கும் நம் நாட்டைப்பற்றிய பாடலொன்று உயர்ந்த கருத்தோவியமாக விளங்குகின்றது. புலவர்மணி பெரியதம்பிப் புலவரின் 'ஈழமணித் திருநாடு' என்ற அழகிய பாடலுக்குப் பிறகு முகிழ்ந்த, கவிஞர் ஒருவரின் நாட்டுப்பற்று மிகுந்த பாடல் என்று நான் இதனைக் கருதுகிறேன். இன்று ஈழத்தின் சமூக நலனுக்கான தேவை என்ன என்பதை கவிஞர் மிகக்காத்திரமாக இங்கு கூறுகிறார்.

''கூட்டுயர்வு கோடிதரும் செல்வம் — அதைக்
கூட்டுவது கொள்கையெனும் தெய்வம்
நாட்டுயர்வு தான் நமது உள்ளம் — இதை
நாடி நயத்தால் புது வெள்ளம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுதான் இன்றைய நாட்டுநலன். அதைக் கொள்கை ரீதியில் நாம் அமைத்துக்கொண்டால்தான் இந்நாடு சுகம்பெறும் என்பதை அழகுற விளக்குகிறார் கவிஞர்.

வரவேற்பு, நான், இறைவன் இருக்கின்றான் முதலாம் கவிதைகளையும் உங்களோடு சுவைத்து அனுபவிக்க நான் அவாவுகிறேன். எனினும் நீங்கள் தனிமையில் அதனைச் சுவைத்து, கவிஞரோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

இளம் கவிஞர் அக்கரைப்பாக்கியனின் இக்கவிதைகள் அவருடைய அனுபவத்திற்கேற்ற சிறுமலர்கள். ஆனால் வருங்காலத்தில் மல்லிகைக் கொடியாகப் பந்தலில் மணம் பரப்பி, தாழை மலராகக் கடற்கரையெல்லாம் கமகமக்க - வாசம் வீசுவார். கவிதை ஒளி பரப்பி நிற்பார் என்பது எனது நம்பிக்கை.

அ. ஸ. அப்துஸ்ஸமது

'அன்பகம்',
அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப்பற்று இ. கி. மி. ம. வி. அதிபர்

# க. தியாகராசா B. A. (Cey.) Dip-in-Ed.

அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

கவிஞன் ஒரு சிருஷ்டிகர்த்தா. அவனது கவிதைகள் ஒவ்வொன்றுமே தனியான, மணியான படைப்புக்கள். எமது உள்ளத்தைத் தொட்டிழுக்கும், உள்ளத்து உணர்வுகளை அசைத்துவிடும் பேராற்றல் பெற்றவை கவிதைகள்.

இத்தொகுப்பில் காணப்படும் கவிதைகள் பல கோணங்களில் பாடல் ஆசிரியரின் சிந்தனையை, கவித்துவத்தைத் தெளிவுறக் காட்டுவனவாக அமைந்துள்ளன. வாழ்வின் சுமையை, இயல்பாக மனதில் படிந்துவிட்ட இறையுணர்வை, காதலின் கனிவை, எமது சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கும் ஊழல்களை கவிஞர் எளிய இனிய நடையில் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவரது ''புதியதோர் உலகம் படைத்திட'' விழையும் மனவெழுச்சியைப் பிரதிபலிப்பனவாகவுள்ள கவிதைகள் சிறப்பாக அமைந்துள்ளன. தனியானதொரு எளிய இனிய நடையில் இக்கவிதைகள் சில கொப்பளிக்கும் எண்ணக் கருத்துக்கள் வரவேற்கத்தக்கவை. இளம் சந்ததியினரது மனதில் இலகுவில் பதிந்துவிடக்கூடிய விதத்தில் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் ஆங்காங்கே பளிச்சிடுவதை இக்கவிதைகளில் காணக்கூடியதாகவிருக்கின்றது.

பலநாள் மனதில் சுமந்த எண்ணக் கருக்கள் அழகிய கவிதைகளாக மலர்ந்திருக்கின்றன. அவற்றினூடாக மெருகேறிவரும் ஒரு இளம் கவிஞனைக் காண முடிகின்றது. வெளியலங்காரங்கள் குறைந்த, ஆயினும் இயற்கை தந்த அழகு துளும்பும் ஒரு குழந்தையை இக்கவிதைகள் நினைவூட்டுகின்றன.

நல்லதோர் முயற்சி இது. மென் மேலும் தொடர்ந்து எதிர்காலத்தில் மலர்ந்து மணம் வீச எனது வாழ்த்துக்கள்.

க. தியாகராசா

கமு / அக்கரைப்பற்று
இ. கி. மி. ம. வி.
1978-10-06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கறை - ஒரு நோக்கு......

செ. தங்கராசா. B. A. அவர்கள்

புன்மையைப் போக்கி புதுயுகம் வேண்டி
புத்துணர்வாய் எழுவது ''புதுமனிதன்'' கவிதை
பஞ்சத்தில் வாடிடும் பாட்டாளி வர்க்கத்தை
நெஞ்சத்தில் நிறுத்திடும் ''நான்'' எனும் கவிதை.
சாதியைச் சாத்திரமாய் சாதித்துப் பயனேதென
சாடிவரும் கவிதை ''சாதியாம் சாதி''.
கடிவாள மில்லா வாழ்க்கையில் களித்து
கறைபட்ட நெஞ்சமாய் ''ஞானம் வரும் நேரம்''.
சீதனத்தால் சீரழியும் சீரற்ற வாழ்வினை
சிதைக்கத் துடிக்கும் ''சீதனச் சிறை''.
பஞ்சத்தில் வாடும் பாவலர் உணர்வுகளாய்
நெஞ்சத்தின் மாற்றம் ''மாற்ற''மெனும் கவிதை.
மதுவிட்டு மகிழ்வெய்த, குடியில் மாண்டிடும்
மானிடர்க்காக ''தம்பிக்கு'' எனும் கவிதை!

சமூகக் கறைகளை நன்கு சாடுவதில்
சலனமின்றியே அவற்றைக் கூறுவதில்
அமுதத் தமிழில் கவிதையாக்குவதில்
அக்கரைப் பாக்கியன் அக்கறையே ''அக்கறை''.

செ. தங்கராசா

இ. கி. மி. மகா வித்தியாலயம்,
அக்கரைப்பற்று.
9-10-78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் சில நிமிடங்கள்...

சொற் கூட்டங்கள் ஒன்றிணைந்து, உன்னதமான கருத்தொன்றினை கலைநயத்துடன் தரும்பொழுது அது கவிதை என கணிக்கப்படுகின்றது. கதைகள்மூலம் விபரித்துச் சொல்லவரும் ஒரு விடயத்தைக் கவிதை வாயிலாக வெகு இலகுவில் விளக்கிவிடலாம் என்பது என் எண்ணம். இது கவிதைக்குரிய சிறப்பென்று இவ்விடத்தில் வர்ணிக்கலாம்.

இலக்கியத்துறையிலே எனக்கு உள்ள ஆர்வம் இந்தக் கவிதை நூல் வாயிலாக ஒருபடி முன்னேறி நிற்பதை என்னால் உணரமுடிகின்றது. என் உள்ளத்தில் ஏற்பட்ட தாக்கம் இந்தக் கவிதைகளில் நீங்கள் ஒன்றி, அதனை அணுவணுவாக ரசிக்கும்பொழுது ஒரு சமநிலைக்கு வருமென நான் கனவுகாண்கின்றேன். ஏனென்றால் ஒரு எழுத்தாளனது எண்ணம் மக்கள்முன் படைக்கப்பட்டு ஓர் உன்னத இடத்தைப் பெறும்பொழுது அவனை இன்பவெள்ளம் அடித்துச்செல்லாமல் விட்டுவிடுமா?

எழுத்தாளனாக யாரும் பிறப்பதில்லை. அவன் சமுதாயத்தினால் உருவாக்கப்படுகின்றான். ஒருவன் தான் கண்ட அனுபவத்தை அவனின் உள்ளக் குமுறல்களை மக்கள்முன் வைக்கும்பொழுது அவனும் ஓர் எழுத்தாளனாகின்றான். நானும் இந்த சமுதாயத்தின் அமைவுகளில் கண்டெடுத்த உண்மை பொய்களை உங்களுக்குத் தருகின்றேன். அவற்றை மனம் திறந்து இனங் கண்டுகொள்வது வாசகர்களாகிய உங்களது கடமை.

உணவில் பலவித சுவைகள் இருப்பதுபோலவே கவிதையிலும் பலவகையான சுவைகள் இருக்கின்றன. அது அவரவர் படிக்கின்ற பக்குவத்திலும், படிப்பவர் வாழ்வோடு அக்கவிதைகள் இணைந்துசெல்லும் விதத்திலுமே தேனாகத் தித்திப்பதை எங்களால் உணரமுடிகின்றது. பசிப்பவனுக்கு எவ்வாறு உணவு அவசியமாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுகின்றதோ அதுபோலவே ஆழ்ந்த இலக்கிய ரசனை உள்ளவர்களுக்கும் கவிதைகளும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

சமுதாயத்திலே உழுத்துப்போன ஒன்றுக்கும் உதவாத சில வழிமுறைகள் இன்றும் மக்களிடையே வேரூன்றி அவர்களை ஓர் இருள் வழியாக நடாத்திச்செல்வதை எம்மால் உணரமுடிகின்றது. வாழ்க்கைக்கு ஒவ்வாத சம்பிரதாயங்கள் மக்களிடையே கலக்கப்பட்டு ஒரு உயர்ந்த வாழ்க்கைநெறி மக்கள் மத்தியில் மலரவேண்டுமென்ற நோக்கிலும் நான் கவிதைகள் படைத்திருக்கின்றேன். அத்தகைய ஒரு இன்பவாழ்வு எதிர்காலத்தில் மலர்ந்துவிட்டால் இந்த கவிதைகளின் சக்தியை அப்பொழுதுதான் என்றால் நன்கு உணரமுடியும்.

இக்கவிதை நூலுக்கு சிறந்ததொரு அணிந்துரை வழங்கிய அ. ஸ. அப்துஸ்ஸமது பி. ஏ. (சிறப்பு) அவர்களும், ஆசியுரை வழங்கிய க. தியாகராசா பி. ஏ. (இலங்கை) Dip-in-Ed. அவர்களும், ஒருநோக்கு வழங்கிய செ. தங்கராசா பி. ஏ. அவர்களும் எனது நன்றி பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

எனது மெல்லிசைப் பாடல்களுக்கு இசையமைத்த கலைஞர்களுக்கும், அவற்றைப் பாடிய கலைஞர்களுக்கும், பாடல்களை ஒலிபரப்பிவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும், எனது கவிதைகளை பிரசுரித்துவரும் பத்திரிகைகளுக்கும் நான் நன்றி கூறுகின்றேன்.

தனது கற்பனைத் திறத்தால் சிறந்ததொரு அட்டைப்படம் வரைந்து கொடுத்த ஓவியர் வேலு சண்முகநாதன் அவர்களுக்கும், இக்கவிதை நூலை வெளியிட்டு என்னை ஊக்கப்படுத்திய ''லக்ஷ்மி கலாமன்ற''த்தினருக்கும் எனது நன்றிகள் உரியன.

அன்பன்

**அக்கரைப்பாக்கியன்**

அக்கரைப்பற்று.
10-10-78.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்பு

வானமதில் மேகத்தைக் கண்டால் - அதை
வண்ணமயில் ஆடி வரவேற்கும் !
கானகத்தில் பூமலரைக் கண்டால் - அதை
கானமுடன் வண்டு வரவேற்கும் !
மானமுடன் வாழ்பவரைக் கண்டால் - என்
மனமென்றும் உருகி வரவேற்கும் !
தேனமுத மழலைமொழி கேட்டால் - என்
சிந்தையதை சிரித்து வரவேற்கும் !

பாரினிலே வசந்தமது வந்தால் - அதை
பாடியே குயில்கள் வரவேற்கும் !
நேரினிலே காதலர்கள் நின்றால் - மிக
நிம்மதியாய்க் கண்கள் வரவேற்கும் !
ஏரினிலே வெற்றிதனைக் கண்டால் - அதை
இங்குழவன் நெஞ்சம் வரவேற்கும் !
ஊரினிலே தர்மநெறி வளர்ந்தால் - அதை
உத்தமரின் உள்ளம் வரவேற்கும் !

நாட்டினிலே சமத்துவத்தைக் கண்டால் - அங்கே
நல்ல சகோதரத்துவத்தைக் கண்டால்
பாட்டினிலே பரம்பொருளைக் கண்டால் - என்றும்
பாசமுடன் திகழ்பவரைக் கண்டால்
ஏட்டினிலே உள்ளவழி தேடி - பாரில்
எத்தினமும் வாழ்பவரைக் கண்டால்
நாட்டமுடன் என்இதயம் விரிந்து - அந்த
நல்லுறவை என்றும் வரவேற்கும் !

★

தினபதி – 1978.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்!

வேதனையின் பிடியில் நான்
வெம்பித் தவிக்கின்றேன்.
சோதனைதான் வாழ்க்கை
சோகம் நிறைகின்றேன்
ஏமாற்றும் உலகத்தில்
எவ்விதம் என்றாலும்
வாழத் துடிக்கின்றேன்
வளம்பெற நினைக்கின்றேன்!
எள்ளி நகைத்தென்னை
ஏளனம் பண்ணிவிடும்
எத்தர்கள் கூட்டமெல்லாம்
இளித்திருந்த சிரிக்கின்றேன்!
சோம்பேறி அல்ல நான்
சொகுசாக சொர்க்கத்தின்
காம்பேறி நிற்கின்ற
காதகனும் அல்ல நான்!
நாடி நரம்பெல்லாம்
நாரென இழுபட்டு
வாடி இவ்வுலகில்
வதங்கிடும் மனிதன் நான்!
பரணிகள் பல பாடி
பாட்டாளி வர்க்கத்தை
தரணியிலே உயர்த்த எண்ணும்
தத்துவவாதி நான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணம் இல்லாது
இளைத்துச் சாவோரின்
கரங்கள் உயர்ந்துவிட
கடிதாய் உழைப்பவன் நான்!
நெஞ்சைத் துளைக்கின்ற
நீசத் தனமெல்லாம்
பஞ்சாய்ப் பறந்திட
பாடுபடும் இளைஞன் நான்!
மனதினில் மண்டிவிடும்
மாயை இருளகற்றி
தினம் தினம் புதுக்கவிதை
தீட்டிவிடும் கவிஞன் நான்!
காலம் இனிமேல்
கண்ணைத் திறந்துவிடும்
ஞாலம் புத்தொளியில்
நன்றாய் புலர்ந்துவிடும்
உழைப்பவ ரெல்லாம்
உண்மை இன்பத்தில்
திளைத்து மகிழும் நாள்
சீக்கிரம் வந்துவிடும்
என்கின்ற அவ்வினிய
எண்ணற்ற நினைவுகளில்
இன்னும் வாழ்ந்துவிடும்
ஏழைகளில் ஒருவன் நான்!
ஏங்கித் தவிக்கின்ற
இதயங்கள் எல்லாமும்
ஓங்கி உயர்ந்துவிடும்
ஓர் நிலையை கண்டுவிட,
சத்தியம், நேர்மை
சமத்துவம் எல்லாமே
இத்தரை மீதினிலே
நிலைபெறத் துடிப்பவன் நான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம புருசராய்
ஒவ்வொரு மனிதனும்
நித்தமும் வாழ்ந்துவிட
நினைக்கின்ற ஒருவன் நான்!
எத்தனை காலந்தான்
ஏங்கியே தவிப்பது,
அத்தனை தவிப்பினையும்
அறுத்திடத் துடிப்பவன் நான்!
சாதி முறை பார்த்து
சமத்துவத்தைப் பாழாக்கி
நீதியினைக் கெடுத்து
நிம்மதியைக் கெடுக்கின்ற,
பாதிவழி சென்றுவிடும்
பண்பு நெறி அற்றோர்க்கு
ஓதியே உண்மைகளை
உணர்த்திவிடும் ஒருவன் நான்!
ஒருத்தன் புசித்து
ஒருத்தன் பசித்திங்கே
இருக்கும் அந்த
இழிநிலையை மாற்றிடவே,
திருத்தம் பல இங்கே
செய்திடும் வகை தனிலே
பொருத்தம் மிக்கதோர்
புதியதோர் வாழ்வினை
பூத்திடச் செய்திடும்
பொதுநலவாதி நான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமனிதன்

எழுவான் நாளை ஒருமனிதன் — அவன்
இதயம் போற்றும் புதுமனிதன்!

உழைக்கும் நல்ல உரம்படைத்து
உள்ளம் முழுதும் ஒளிபடைத்து
பிழைக்கும் நல்ல மார்க்கத்தை
பெருகும் வெள்ளம் போல்தந்து,
மனித நெறியைப் புவிக்கீந்து
மங்களமான வாழ்வெடுத்து
புனிதம் புவியில் நிறைந்திடவே
புன்மை களைந்து புகழ்பெறவே

எழுவான் நாளை ஒருமனிதன் — அவன்
இதயம் போற்றும் புதுமனிதன்!

பொய்யைக் குழைத்து மெய்யாக்கி
போலிக் குணத்தைப் பெரிதாக்கி
வையம் தன்னில் வாழ்கின்ற
வாழ்வைத் துரத்தி வளம்சேர்க்க,
அன்பும், அறமும் தனதாக்கி
அறிவைக் கெடுக்கும் குணம்நீக்கி
பண்பும், பரிவும் உயிராக்கி
பாரில் இன்பம் பெருக்கிடவே

எழுவான் நாளை ஒருமனிதன் -- அவன்
இதயம் போற்றும் புதுமனிதன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் பொழுதும் நடைமுறையில்
நல்ல வசந்தம் வரும்வகையில்,
வாழும் வழிகள் பல எடுத்தே
வளரும் சமூகம் உயர்வுபெற,
தனக்கென என்றும் வாழாமல்
தரணியில் உள்ளம் சோராமல்
மணக்கும் கொள்கை நிறைந்தவனாய்
மண்ணில் வெற்றி நடைபோட

எழுவான் நாளை ஒருமனிதன் — அவன்
இதயம் போற்றும் புதுமனிதன்!

பெரியோர் வாழ்க்கை வழிகண்டு
பெரிதும் ஒழுக்கம் துணைகொண்டு
பெருமை பெற்று வாழ்ந்துவிட
பேராசை தரும் வழிமறைத்து,
எல்லா உயிரும் ஒன்றெனவே
எண்ணி வாழ்தல் நன்றெனவே
பொல்லாக் குணத்தை அழித்தென்றும்
புவியில் ஒருமை கொழித்திடவே

எழுவான் நாளை ஒருமனிதன் — அவன்
இதயம் போற்றும் புதுமனிதன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதைகள்!

வாழ்க்கை என்னும் பாதையிலே
வளமாய் நடக்கும் மனிதரெல்லாம்
சேர்க்கும் நல்ல புகழனைத்தும்
தேனாய் இனிமை சேர்க்குது இங்கே!
வாழப் பிறந்த நாங்களெல்லாம்
வாழத் துடிக்கும் வேளையிலே,
வாழ்க்கைப் பாதை மாறாமல்
வாழுதல் தானே அறிவுடைமை!

அறிவெனும் பாதை பல இருக்க
அழியும் பாதை தனில் சென்றால்
நெறியும் முறையும் பாழாகி
நேர்மை மண்ணில் மறையுமன்றோ!
நேர்மை மண்ணில் மறையுமென்றால்
நீதியும் அழிந்தே போகுமன்றோ!
நீதியும் மண்ணில் அழியுமென்றால்
நேரும் அனைத்தும் துன்பமன்றோ!

துன்பம் என்னும் பாதையிலே,
தூரப் பயணம் செல்வதென்றால்
இந்தப் பிறவி எடுத்ததிலே
ஏதும் நன்மை நமக்குண்டோ?
ஆதலால் அன்பு, தர்மமென்னும்
அழகிய பாதை தனில்சென்று
இன்பமான ஓர் உலகை
இயக்கச் செய்தல் வேண்டுமன்றோ!

இயக்கம் நமது நல்லறிவின்
இனிய பாதை தனில் சென்று,
தயக்கம் இன்றி யாபேரும்
தரணியில் வாழ்ந்திட பாதை செய்வோம்!
பாதையை நன்றாய் வாழ்க்கைதன்னில்
படைத்து இனிமேல் துயரென்னும்
போதையை அகற்றி புவிமீதில்
புண்ணியம் செய்து வாழ்ந்திடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணம்!

என்றோ ஒருநாள் என் ஆவி பிரிந்துவிடும்!
என்றன் உடலும் எப்படியோ மறைந்துவிடும்!
அந்த நினைவுகளின் அதிர்வுகளோடு
அமைதி கொண்டுநான் அகிலத்தில் வாழ்கின்றேன்!
பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம்
என்கின்ற,
நியதிவழி நிற்றல் இவ்வுலகின் இயக்கம்!
இந்த உலகத்தின் இயக்கம் இதுவென்றால்
இந்தப் பிறவியின் இயக்கந்தான் என்ன?
ஏதோ ஒருவழியில்
இப்பிறவி எடுத்துள்ளேன்!
சூதோ, வாதோ நெஞ்சினில் இன்றி
சுழற்சி கண்டிட துடிப்பாய் நிற்கின்றேன்!
என்றனைப் போன்றே எல்லாரும் வாழ்ந்துவிட
என்றும் நினைக்கின்றேன்; நேர்வழி செல்கின்றேன்!
பிறவி எடுப்பதோ தொல்லை........ அதனால்
பிறவாப் பேரின்பம் பெற்றிட நினைக்கின்றேன்!
ஆசைகள் இல்லா நெஞ்சம் எல்லாம்
ஆண்டவன் என்றும் வாழ்வது உண்மை.
ஆசைகள் வளரும் நெஞ்சம் எல்லாம்
ஆணவம் நின்று துடிப்பதும் உண்மை!
ஆசையே அழிவின் அத்திவாரக் கற்கள்
ஆசையால்,
ஆசையை மறந்திடும் என்மனச் சொற்கள்.
பிறப்புக்கும், இறப்புக்கும்
இடையில் வருகின்ற
வாழ்வின் விசாலம் எத்தனை, எத்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவும், பகலும் மாறுதல் போலே
உறவும், பகையும் மாறிடும் கோலம்.
உதடும், உள்ளமும் வேறாய்ச் சுழலும்
உதவாக் குணங்களில் திகழ்ந்திடும் ஞாலம்!
ஏமாற்றும் வித்தையிலே
எள்ளளவும் மாறாமல்
தாம்வாழ நினைப்போர்கள்
தாரணியில் ஏராளம்!
இறக்கும் வரைக்கும்
என்மனப் போக்கில்
மறக்கும் தீய வழிதனை மறந்து
மாசற்றோனாய் வாழ்ந்தே தீருவேன்!
என்னைப் பார்த்து வாழ்வோர் வாழட்டும்
இல்லையேல்,
என்னை மறந்து செல்வோர் செல்லட்டும்!
எண்ணம் சிறுத்து, தம்மை மறப்போர்
இந்த உலகிலே இருப்பதும் உண்மை!
இவர்கள் போக்கையே திருத்தநான் விழைகின்றேன்!
இவர்கள் திருந்தவே இங்குநான் அழிகின்றேன்!
உயிரோடு நானிங்கே உரைத்திடும் போதனைகள்
உலகோரின் நெஞ்சத்தில் சுமைபோல் தெரிந்திடலாம்!
உள்ளத்தைத் திறந்துநான் காட்டும் போதினிலும்
உதவாக்கரையென்றே என்னைத் திட்டிடலாம்!
என்றோ ஒருநாள்என் எண்ணம் பலித்துவிடும்
என்றோ ஒருநாள் இவ்வுலகம் சிறந்துவிடும்!
இன்று என்னைப் பழிப்பவர் எல்லாம்
அன்று என்னைப் போற்றவும் கூடும்.
புகழ்ச்சிக்கும், பெருமைக்கும் நான் வாழவில்லை
புரட்சிக் கருத்துக்காய் நான் வாழுகின்றேன்!
என்றன் வாழ்க்கையின் அடிச்சுவடுகள்
என்றும் அழியாதொளிரும் நினைப்பிலே
என்றன் வாழ்வு இங்கு செல்கிறது.
நம்பிக்கையே வாழ்வின் நட்சத்திரமாக
நாளும் வாழ்வில் பயணம் செய்கின்றேன்
வாழும் வகையில் பயணம் செய்கின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பமடா!

அன்னையின் மடிதனில் நானிருந்தேன் — அது
ஆரம்ப காலத்தின் இன்பமடா!
பண்ணொடு பாடம் படித்திருந்தேன் — அது
பள்ளிப் பருவத்தின் இன்பமடா:
கன்னியின் கைகளில் நான் தவழ்ந்தேன் — அது
காளைப் பருவத்தின் இன்பமடா!
பொன்னொடு புகழும் சேர்த்திருந்தேன் — அது
புவியினில் ஒருவகை இன்பமடா!

மக்களை நானும் பெற்றிருந்தேன் — அது
மழலை எனக்கீந்த இன்பமடா!
சிக்கலைத் தீர்க்கும் பிள்ளை கண்டேன் — அது
சிந்தையில் நான் பெற்ற இன்பமடா?
சித்தம் கசிந்திட நான் தொழுதேன் — அது
தெய்வம் தந்திட்ட இன்பமடா!
முத்தம் தந்திட பேரன் வந்தான் — அது
முதுமையில் நான் பெற்ற இன்பமடா!

தினபதி — 1978.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கவிதை

நான் படைக்கும் கவிதைகளின் பொருள்கள் எல்லாம்
நானிலத்தின் கொடுமைகளை எதிர்த்தே நிற்கும்!
ஏன் என்று கேட்டு, எதற்கென்று அறியாரை
எள்ளளவும் போற்றிப் பாடாது என் கவிதை!
தான் என்னும் செருக்குற்று தரணியிலே அலைவோரை
தக்கபடி போற்றிப் பாடாது என் கவிதை!
பாண்கூடப் பசிக்கின்றி பஞ்சத்தில் தினம் வாழ்வோர்
பரிதாப நிலையகற்றத் துடித்திருக்கும் என் கவிதை!

கோடித் துயர்களினால் குவலயத்தில் சுகம் மறந்து
கூனிக்குறுகி, குறை சுமந்தே என்னாளும்,
வாடித் தினம் ஏங்கும் வளமற்ற வாழ்வினிலே
வாழும் பாட்டாளி நிலைமாற்றி அவர்களெல்லாம்,
கூடி ஒன்றாக கொடுமைகளில் விடுபட்டு
கொள்ளை இன்பத்தில் குளித்தே நித்தமும்
பாடிக்களித்து பக்குவமாய் வாழுமட்டும்
பலகோடி உருப்பெற்று பவனிவரும் என்கவிதை!

ஈனத்தை மறந்து, எழுச்சிதனை மறைத்து
இவ்வுலகில் வாழ்வோரை திருத்தவரும் என்கவிதை!
நாணத்தை மறந்து நல்லோரைக் கெடுக்கின்ற
நல்லிதயமற்றோரை எதிர்க்கவரும் என்கவிதை!
தானத்தில் சிறந்து, நிதானத்தில் உயர்ந்து
தரணியில் வாழ்வோரின் நிலையோடு, என்னாளும்
மானத்தில் சிறப்புற்று, மானிடர்க்கு வழிகாட்டும்
மாண்புடையோர் பெருமைதனை பாடவரும் என்கவிதை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம்!

கூரை இறந்ததனால் கொட்டும் மழை அத்தனையும்
தாரை தாரையாகத் தகைந்தது என் மனையில்!
யாரை நோகுவேன் யாரிடம் எடுத்துரைப்பேன்
தேரைபோல் நானும் தேய்ந்தே போய்விட்டேன்!
பாட்டெழுதும் ஆசையினால் பாடல்கள் பல செய்தேன்
வீட்டில் எழும் துன்பத்தை விலக்கிட நான் மறந்தேன்!
வாட்டமுற்ற என் இல்லாள் வசைமாரி பொழிகின்றாள்
நாட்டமுடன் நானோ கவிதைதான் புனைகின்றேன்!

''வறுமையைப் போக்கிட வக்கில்லை........ இவரோ
பெருமைகள் பெற்றிட பாட்டெழுதிக் கிழிக்கின்றார்!
பாட்டென்ன நமக்கு படைத்திடுமோ சோறென்று!''
கூட்டத்தில் பேசுமாப்போல் கத்துகிறாள் என்மனைவி!

என்சொல்வேன் என்சொல்வேன்! என்விதியை
என்சொல்வேன்!
புண்பட்ட நெஞ்சுடனே பிள்ளைகளைப் பார்க்கின்றேன்,
கண்களிலே கண்ணீராய் கவலையுறும் சிறுமுகமாய்
மண்மீது வாழுவதை மடையன்நான் பார்க்கின்றேன்!

பாட்டெழுதும் ஆசையினால் வீட்டை மறந்துவிட்டேன்
பாட்டுக்கள் தந்ததுவோ பஞ்சமும் பசியுந்தான்!
வாட்டும் வறுமைதனை வேருடன் அறுத்தெறிய
வாழ்க்கையில் நான் நல்ல திட்டங்கள் எடுக்கின்றேன்!

ஏற்றம் கண்டுவிட, ஏழ்மையைப் போக்கிவிட,
போற்றும் உழைப்பின் வழிசெல்ல நினைக்கின்றேன்!
மாற்றம் கொண்டுள்ள என்மனதின் நிலைகண்டு
போற்றி எனை என்மனைவி புன்னகை புரிகின்றாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகம் படைப்போம்!

இந்த யுகத்தின் தடைகள் அகல
எங்கும் இன்ப வசந்தம் மலர,
நொந்த வாழ்வின் சுமைகள் இறக்கி
நொடிந்த உள்ளம் என்றும் மலர,
சொந்தமெனவே பலரும் வாழ,
சோதி போன்றே எண்ணம் ஒளிர,
சந்ததம் சுகம் பல்கிப் பெருக,
தரணியில் இனிய புதுயுகம் படைப்போம்!

நீதி, நேர்மை நிலைத்திட மண்ணில்,
நிறைந்த செல்வம் குவிந்திட நாட்டில்,
சாதி, பேதம் அகன்றிட என்றும்
சமமாய் வாழ்ந்திடப் பழகிக் கொள்வோம்!
நாதியற்று நலிந்து வாடும்
நாளும் உழைக்கும் நம்மவர் நிலைமை,
வீதி ஓரம், என்பதை மாற்றி
வியந்து போற்றும் புதுயுகம் படைப்போம்!

சிறக்கும் எங்கள் சக்திகள் என்றே
சிந்து பாடி சிந்தை மகிழ்வோம்!
பறக்கும் அடிமை வாழ்வு என்றே
பண்பாய் வீர முழக்க மிடுவோம்!
திறக்கும் வசந்தக் கதவுகள் என்றே
சேர்ந்தே ஒன்றாய்ப் பயணம் செய்வோம்!
இறக்கும் இனிமேல் துயர்கள் என்போம்
இனிதாய் இங்கொரு புதுயுகம் படைப்போம்!

தினபதி – 1978.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனச் சிறை!

சீதனப்பேய் தன் கொடிய கரத்தால்
சேர்த்துப் பிடித்தே ஏழையின் வாழ்வில்
பாதகம் செய்யும் பண்பற்ற முறையை
பார்க்கின்ற போது உள்ளம் வெடிக்கும்!
ஆதனமாக மங்கையர்க் கிங்கே
அருங்குணம் நான்கும் இருந்திடும் போது
சீதனம், சீதனம் என்றே இழுப்பது
சிந்தையற்றவர் செய்கையன்ரே !

காரும், நகையும், கண்ணுடி வீடும்.
காசோர் தொகையும், காணியும் சேர்த்து
தாரும் என்றே இழித்துக் கேட்டால்,
தாங்காது அலேவர் பெண்ணைப் பெற்ருேர்?
சேரும் பணங்கள் செலவுக்கஞ்ச
சிந்தனை செய்து சிதைவுறும் நிலைமை
மாறும் நாட்கள் எந்த நாளோ
மண்ணில் அவையே மங்கள நாட்கள் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் பொழுதும் ஏங்கித் தவிக்கும்
நங்கையர் வாழ்வை காண்பீர்! காண்பீர்!
வாழும் ஆசை அவர்க்குண்டெனினும்
வாழத் தடையாய் சீதனம் இருக்கும்!
கூழும் வேளைக்கின்றியே வாடும்
குமரிப் பெண்களின் நிலையை மறந்து
ஏழும், எட்டுமாய் ஆயிரக் கணக்கில்
இரக்க மின்றியே கேட்பதும் முறையோ?

பாரும் கொடுமையை பகுத்தறிவுள்ளீர்!
பாரினில் சீதனம் படுத்திடும் பாட்டை!
வாரும் புதுமைக் கொள்கைகள் ஏற்றே
வளம்பெறும் அருமை வாழ்வொன்றமைப்போம்!
கூறும் இனிமேல் புதுமனத்தோரே
கொடுமை, சீதனம் கொடுமை என்றே!
நேரும் இதனால் நிறைந்த வாழ்வு
நிம்மதி காண்போம் மறைந்திடும் தாழ்வு!

இதயம் என்ன இரும்பால் ஆனதோ
எத்தனை புத்திகள் சொல்லிய போதிலும்
எதையும் மறந்து உள்ளம் இழந்து
என்றும் சீதனக் குடையை விரிப்பர்!
உதயம் இன்றியே இருண்ட வாழ்வில்,
உழன்று தவிக்கும் பெண்களின் வாழ்வு
சிதையும் நிலையை மாற்றியமைக்க
சீதனச் சிறையை உடைத்து நாம் எறிவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிக்கு......

உணர்வு சினைப்பெடுந்து உலகில் உறுதியொடும்
வெளிப்பட்டு மிக்க வேகமாய் வருகிறது
மண்ணகத்தில் என்றும் மதிப்புடனே வாழாமல்
எண்ணத்தில் ஏதோ உணர்ந்திங்கே உழலுகின்றாய்!
தொடரும் இன்பமதை வேரறுக்கும் நினைவுடன் நீ
இடரும் பாராமல் ஏன் மதுவை நாடுகின்றாய் !

தெருநாய் சிலர்க்கு தெவிட்டா இனிப்பாக
உருமாறிப் போன ஒன்றன்றோ சாராயம் !
வெட்கமி(ல்)லா இந்நிலையை மேன்மை என எண்ணி
சிக்கித் திரிகின்றாய்........ ஏனடா இப்போக்கு?
குடியைக் கெடுக்கும் குடியில் நீ வீழ்ந்து
அழிவைத் தேடுதல் ஆகுமோ இங்குனக்கு?
எங்கெழுந்த உணர்ச்சியடா இக்கோலம் கொண்டு
எக்காளம் கொட்டி இழிக்க நடக்கின்றாய்!
தக்கபடி வாழும் வழிமுறை பல இருக்க
திக்கெலாம் உன்மானம் பறக்கஏன் வாழ்கின்றாய்!
துடிக்கின்றாய் என்ன துடுக்கு........ மர அணில்போல்
நடிக்கின்றாய் புறத்தில் சாராயமோ வாழ்க்கை!

உன்னைப் போன்றவர்கள் ஒழுக்கநெறி சென்று
உயர்ந்ததோர் நிலையை அடைந்திடும்போது
கண்ணை மறைத்து, கருத்தையும் மயக்கிடும்
கள்ளுச் சாராயம் தரும்வழியில் செல்லுகின்றாய்!
வெட்கமில்லை உனக்கு........ சீச்சீ இதைமாற்றி
வெற்றிதனைத் தேட விரைந்துவிடு நானே !

காந்தியின் வழியில் நடைபயின் றென்றும்
கருணை மழையைப் பொழிந்திடப் பழகு!
சாந்தியைத் தேடும் அமைவுகளோடு
தயாள குணமாய் வாழ்வதே அழகு!
குடித்துக் குடித்துக் குறையும் உந்தன்
குள்ள வாழ்வால் பெரிய வம்பு....... அதனால்
அன்பாகக் கூறுகிறேன் தம்பி மறந்துவிடு
அருந்திவிடும் இந்த அவல மதுவதனை!
எங்கே, உனது இதயம் திறந்து, புகழ்
மங்களமாய் என்றும் வாழ்வில் முழங்கிவிட
ஒன்றிடுவாய்........ உன்னை வாழ்த்திவிடும் உலகு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தன் ஆசை!

மனைவாழ்வில் சுகம் தேடும்
ஆசை இல்லை!
மண்மீதும், பொன்மீதும்
ஆசை இல்லை!
பனைபோன்று புகழ் உயர
ஆசை இல்லை!
பலபேரும் வாழ்த்திசைக்க
ஆசை இல்லை!
எனைச் சூழும் இன்பத்தில்
ஆசை இல்லை!
இவ்வுலகின் உறவுகளில்
ஆசை இல்லை!
இணையில்லா இறையோனின்
இரண்டு பாதம்
என்றடைவேன் என்பதுதான்
எந்தன் ஆசை!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள் மலர்கின்றன.

கவலைகள் நெஞ்சில் எழுகின்றன — அங்கே
கவிதை மலர்கள் மலர்கின்றன !

உள்ளம் முழுதும் பகைவளர்த்து
உதட்டில் நன்ருய் சிரிப்புதிரும்
கள்ளம் உடையோர் பலபேரை
காசினிமீதில் காண்கையிலே

கவலைகள் நெஞ்சில் எழுகின்றன — அங்கே
கவிதை மலர்கள் மலர்கின்றன !

மனைவி, மக்கள் துடித்திருக்க
மாற்றுவழியில் சென்று நிதம்,
இணையில்லாத சுகம்காணும்
இரக்கமற்ருேர் நிலைகண்டால்

கவலைகள் நெஞ்சில் எழுகின்றன — அங்கே
கவிதை மலர்கள் மலர்கின்றன !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரண்டல் செய்து சுவைபார்த்து
சூதும் வாதும் செய்கின்ற
வரண்ட உள்ளம் படைத்தோர்கள்
வாழும் முறையைப் பார்க்கையிலே
கவலைகள் நெஞ்சில் எழுகின்றன — அங்கே
கவிதை மலர்கள் மலர்கின்றன !

சாதி சொல்லி ஒருவனையே
தாழ்த்தி, தாழ்த்தி பேசுமந்த,
நீதியற்ற நெறிமுறைகள்
நிலத்தில் வளர்ந்து வரும்பொழுது
கவலைகள் நெஞ்சில் எழுகின்றன — அங்கே
கவிதை மலர்கள் மலர்கின்றன !

குணத்தால் ஒன்ருய் இருந்துவிட்டு
கூடி நன்ருய் வாழ்ந்துவிட்டு,
பணத்தைக் கண்டால் மனம்மாறி
பாதியில் பிரிவோர் நிலைகண்டால்
கவலைகள் நெஞ்சில் எழுகின்றன — அங்கே
கவிதை மலர்கள் மலர்கின்றன !

ஒருவர் மகிழ்ந்து வாழ்வதையே
உள்ளந்தன்னில் சகிக்காமல்,
பொறுமை இழந்தே புவிமீதில்
பொருமை கொள்வோர் நிலைகண்டால்
கவலைகள் நெஞ்சில் எழுகின்றன — அங்கே
கவிதை மலர்கள் மலர்கின்றன !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதியாம் சாதி!

சாதியாம் சாதி, சதிகாரச் சாதி
நீதியை மறைத்து நிலைகெடுக்கும் சாதி!
சோதியாய் என்றும் சுடர்விடும் வாழ்வை
சுக்குநூறாய் உடைத்திடும் சாதி!
ஆதியில் ஒன்றாய் வாழ்ந்தவர் தம்மை
அணைகள் போட்டு பிரித்தே இன்று
பாதிக்கும் வகையில் மக்களுள் விரிவாய்
படர்ந்தே சென்றிடும் பாதகச் சாதி!
ஒற்றுமையாக வாழ்ந்துநாம் சென்றால்
உயர்வு எதிலும் எம்மைச் சேரும்!
வேற்றுமை எண்ணம் விளைந்தே சென்றால்
வேருடன் இன்பம் அழிந்தே போகும்!
ஏற்றமாய் எதிலும் சமநிலை ஓங்கி,
இவ்வுலகெல்லாம் ஓர் இனமாகி,
மாற்றமே கண்டால் மாண்புறும் வாழ்வு
மங்களமாக வந்தெமைச் சேரும்!
இறைவனால் படைத்தவர் மானிடர் என்றால்
ஏனடா எங்களுள் சாதிகள் நூறு!
உறைந்தே கிடக்கும் பிரிவினை எல்லாம்
உதறித் தள்ளல் உயர்ந்ததோர் போக்கு!
நிறைவைப் பெற்று வாழ்ந்திட வேண்டின்
நிலத்தில் ஒருமை சேர்ந்திடல் வேண்டும்.
குறைகள் தீர்ந்து, குணம் சிறந்தோங்க
கொடிய சாதி முறையினை ஒழிப்போம்.
கொடிய சாதி முறைதனை ஒழித்து
கொழிக்கும் வாழ்க்கை நிலைதனை அமைத்து
நெடிய உறவை நேர்மையாய்க் கொண்டு
நேசமாய் நாங்கள் வாழ்வதே அறிவு!

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவுடன் பெற்று
# அழகுடன் வாழ்வோம்!

ஆண்டுக்கு ஒரு பிள்ளை பெற்றுவிட்டால்
ஆனந்தம் வாழ்வினில் வந்திடுமோ ?
வேண்டும் பிள்ளை என்றுபி ரண்டென்றால்
வேதனை வாழ்வினில் சேர்ந்திடுமோ ?

பஞ்சமும் பதட்டமும் வருவதில்லை
பாரினில் துன்பம் தொல்லையில்லை
கொஞ்சமும் ஏக்கம் வருவதில்லை
குடும்பத்தில் கட்டுப்பாடிருந்தால் !

உள்ளதே இரண்டு பிள்ளையென்றால்
ஒவ்வொரு நாளும் இன்பமன்றோ
நல்லதே நாட்டில் செய்வதென்றால்
நாமும் அளவுடன் பெற்றிடுவோம் !

பிள்ளைகள் பெற்றிடும் யந்திரமாய்
பெண்களை எண்ணியும் பார்ப்பதுண்டோ !
தொல்லைகள் இன்றி தொடர்ந்துவாழ
தூய இதன்வழி சென்றிடுவோம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டுக்கு மேலே எமக்கு வேண்டாம்
இதுவே வாழ்வின் ஊன்றுகோலாம்
இருண்ட வாழ்வறும் நிலைவேண்டின்
இதனை உணர்ந்தே வாழ்ந்திடுவோம்!

வறுமைகள் நீங்கிட நாம் நினைத்தால்
வாழ்வினில் சுகம்பல காண்பதென்றால்
பெருமைகள் பெறுவதை நாம் நினைத்தால்
பிள்ளைகள் அளவாய் பெற்றிடுவோம்!

இல்லற வாழ்விற்கு இருபிள்ளையாம்
இதுவே அறிஞர் சொன்ன சொல்லாம்
நல்லறம் ஓங்கிட வேண்டுமென்றால்
நாமும் இதனை அறிந்திடுவோம்!

அளவுடன் குழந்தை பெற்றுவிட்டால்
அன்புடன் நாளும் வாழ்ந்திடலாம்!
அழகுடன் விளங்கி, அகம்மகிழ
ஆசைக்கு இரண்டே நாம்பெறுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம் வரும் நேரம்!

வாழத் தெரியாமல் வாழ்ந்ததனால் நான் இன்று
ஆழக்கடல் மீதில், அலைகின்ற துரும்பானேன் !
சூழத்துயரத்தை தொடர்ந்தெனக்குத் தந்துவிட்ட
காலத்தின் நிலை எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றேன்!

என்னைப் பெற்றவரோ எத்தனையோ புத்திசொன்னார்
என்னைச் சூழ்ந்தவர்கள் இன்பவழி தந்து நின்றார்.
கண்ணை மூடியே நான் கண்டபடி நடந்ததனால்
காலம் முழுவதுமே கவலையினால் வாடுகிறேன் !

மணந்தவள் இன்றோ வாடி வதங்குகின்றாள்,
மக்களும் அவளுடனே சேர்ந்து கதறுகின்றார்.
மனந்தனில் அன்பினை மறந்ததனால் நானின்று
மடையனாகி சிறைதனுள் துடிக்கின்றேன் ?

அண்ணன் தம்பியெலாம் அழகாகச் சொன்னார்கள்
ஆரும் சொன்னவழி என்செவியில் ஏறவில்லை!
மன்னன் ஆகினேன் மற்றவரை வாட்டுவதில்
மாசுற்ற மனத்தினனாய் மண்மீதில் நடந்திருந்தேன் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவரின் பொருள்களிலே மாறாத ஆசையும்,
மாற்றானின் மனைவியிலே தீராத ஆவலும்,
கற்றவரின் கண்களுக்கு ஓயாத தொல்லையும்,
காட்டுவதே எந்தன் கொள்கையாய் கொண்டிருந்தேன்!

புத்தி எனக்கெவரும் புகட்டிவிட வந்துவிட்டால்
கத்தியைக் காட்டி, கதறி ஓடச் செய்திருந்தேன்!
சத்தியம் மறந்து, தரணியிலே வாழ்ந்ததனால்
சித்திபெறவில்லை நான் வாழ்க்கையெனும்
வகுப்பினிலே!

என்னைப் பெற்றதனால் என்பெற்றார் மதிப்பிழந்தார்
என்னை மணந்ததனால் என்மனைவி வாழ்விழந்தாள்
பொன்னைப் போன்றிருக்கும் புதல்வர்கள்
என்போக்கால்
புவியில் நாளை புகழிழந்தே வாழ்ந்திடுவர்!

எண்ணிப் பார்க்கின்றேன் இழிவான வாழ்வினை
எந்தன் உள்ளம் வெந்து அழுகிறது!
மண்ணில் அன்றுநான் இதைஎண்ணி நடந்திருந்தால்
மனம்நோகும் வாழ்விது வந்துதான் இருந்திடுமோ!

தீயுள் அகப்பட்ட மெழுகாய் உருகுகின்றேன்.
சிந்தை முழுவதும் புண்ணுற்றுச் சிதறுகின்றேன்!
ஆயுள் தண்டனையால் அவதியுறும் என்னிலைபோல்
ஆண்டவனே அவனியில் நீ ஆருக்கும் கொடுத்திடாதே!

வாழத்தெரியாமல் வாழ்ந்ததனால் நான் இன்று
ஆழக் கடல்மீதில் அலைகின்ற துரும்பானேன்!
சூழத் துயரத்தைத் தொடர்ந்தெனக்குத் தந்துவிட்ட
காலத்தின் நிலைஎண்ணிக் கண்ணீர் வடிக்கின்றேன்!

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தமனாக உயர்ந்திடு!

தனக்கென்று வாழ்ந்திடா இதயம் பெற்று,
தரணியில் உண்மைநிலை தனைக்கற்று
குணக்குன்று என்றுனைப் பலரும் போற்ற
கொள்கையில் உயர்ந்துநீ வாழவேண்டும்!
நினைக்கின்ற நினைவுகள் விரிந்துகொள்ள
நீதியும், நேர்மையும் நிறைந்து செல்ல
உனைக்கண்டு எவரும் வாழும் வண்ணம்
உத்தமனாக நீ உயர்ந்திட வேண்டும்!

பெற்றவர் என்றும் வருந்திடா வண்ணம்
பேணிநீ அவர்களைக் காப்பதுன் கடமை!
மற்றவர் உழைப்பிலே வாழ்ந்திடா வண்ணம்
மகிழ்வுடன் உழைத்து வாழ்வதுன் பெருமை!
கற்றவர் என்றுமே போற்றிடும் வண்ணம்
கருத்தினில் புரட்சிநீ கொள்வதே புதுமை!
நற்றவம் செய்தனர் இவன் பெற்றோரெனவே
நானிலம் உந்தனை வாழ்த்தலே முறைமை!

திக்கெலாம் உன்புகழ் பரவிடும் வண்ணம்
திறமைநீ கொள்கையில் பெற்றிடல் வேண்டும்!
தக்கதோர் வழிதனை தரணியில் வகுத்து
தாய்மனம் கொண்டுநீ சிறந்திடல் வேண்டும்!
சுக்கு நூறாகத் துன்பங்கள் உடைய
சுறுசுறுப்பெனவே வாழ்வினில் திகழ்ந்து
பக்குவமாக பலருடன் பழகி
பாரினில் உயர்ந்துநீ வாழ்வதே உயர்வு!

தினபதி — 1978.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் உறவுமுறை பொங்கும்!

ஈழம் எமக்கினிய நாடு — அதன்
இனிமை தனையறிந்து பாடு.
காலம் மதித்திடும் கூடு — பெரும்
கருணை உளத்துடனே நாடு.

வாழும் மனிதரிலே இன்று — நல்ல
வளங்கள் மலிகிறது நன்று.
சூழும் துன்பங்கள் வென்று — சுகம்
சொந்தம் கொண்டிடுவோம் நின்று.

கூட்டுயர்வு கோடிதரும் செல்வம் — அதைக்
கூட்டுவது கொள்கையெனும் தெய்வம்.
நாட்டுயர்வு தான்நமது உள்ளம் — இதை
நாடி நயத்தல் புது வெள்ளம்.

நிறையும் நெறியுமுயர் பொங்கும் — இதில்
நேசமெனுங்குருதி தங்கும்.
மறையும் வறுமைதொல்லை எங்கும் — இதில்
மக்கள் உறவுமுறை பொங்கும்.

*

இக்கியதீபம் — 1977.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவு

ஓலைக் குடிசை
ஓடிகின்ற மண்குடிசை
வேளை தவருது
வேலை செய்திடினும்,
நாங்கள் வாழ்வதோ
நகைத்திடும் கோலம்!
கோலம் காட்டியெம்மை
கொடுமைப் படுத்துவதால்
காலம் தோறும் நாம்
கண்ணீர் விடுகின்றோம்!
ஏப்பம் விடுகின்ற
எத்தர்கள் கூட்டமே,
எம்மவரை இன்று நீ
இழிவாக எண்ணுதே!
இனியும் நாங்கள்
ஏமாளிகள் அல்ல!
ஏமாறும் எண்ணம்
இனியும் வளராது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சுவடு
உலகிலே மறைய
உண்மை பல நாங்கள்
உணர்ந்து கொண்டுள்ளோம்!
எங்கள் யுகத்தின்
எழுச்சிக் கீதம்
மங்களம் பெற்றே
மண்ணில் ஒலிக்கின்றது!
பொங்கும் புதிய உணர்வுகளோடு
எங்கும் நாங்கள்
விரைந்து செல்கின்றோம்!
விரைந்திடும் நாங்கள்
வெற்றியைக் காண்போம்!
வெற்றியினால் எங்கள்
வேதனைகள் மறந்துவிடும்!
விடிவென்னும் வாழ்வொன்று
விரைவினிலே வந்துவிடும்!
ஆம்,
விடிவென்னும் வாழ்வொன்று
விரைவினிலே வந்துவிடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துடைப்பாயோ!

கண்ணே, மணியே கற்கண்டே என்றென்மேல்
கவிதை பலகோடி கனிவாகப் பாடியதும்,
பொன்னே, பூவே, புதும்பழமே எனநாளும்
போற்றி என்மேல் புகழாரம் சூடியதும்,
விண்ணே இடிந்தாலும், விலகேன் விட்டென்று
வீரத் தமிழில் விளக்கங்கள் தந்ததுவும்,
என்னே புதுமை, என்னே சிறுமை
இதயம் மாறுவது எத்தனை கொடுமை!

பொய்யைக் கூறிஎன் புனிதத்தைக் கெடுத்துவிட்டான்
பூவாய் இருந்தஎன்னை புழுதிக்குள் எறிந்துவிட்டான்
கையைப் பிடித்தன்று அவன்சொன்ன கதையெல்லாம்
காதில் இடியாய் இன்றுதான் ஒலிக்கிறது.
மையலென் றெந்தன் மானத்தைப் போக்கியவன்
மானிடன் என்றின்று மண்மீதில் வாழுவதை
தையலாள் என்னுள்ளம் கண்டு கலங்குவது
தர்மத்தின் கண்களுக்கும் தோன்றாமல் போனதுவோ!

கன்னிப் பெண்ணென்னை காசினியில் கெடுத்திட்ட
காளை அவனுள்ளம் மாறத்தான் மாட்டாதோ?
எண்ணி, எண்ணியே எந்நாளும் அழிந்துவிடும்
என்றன் வாழ்வு மலர்ந்திடவும் மாட்டாதோ?
அன்பென்னும் நிலைமாறி, அவனியில் அலைகின்ற
ஆறறிவற் றோரின் அவல நிலைகளினால்
என்போன்ற பெண்களின் இன்ப வாழ்வெலாம்
எரிந்து சாம்பராய் இவ்வுலகில் போவதேன்!

அபலை எனக்கிந்த அல்லல்ஏன் வந்ததுவோ
ஐயோ இறைவா உன்னைத்தான் கேட்கின்றேன்!
கவலை பெரிதாகி நான்வாடும் வேளையிலே
கடல்போல் இன்பத்தில் அவன்நீந்தல் நன்றாமோ?
புயலைப்போல் வீசும் துயரங்கள் ஓயாதோ
போற்றும் பேரின்பம் வந்தென்னைச் சேராதோ?
கயிலை மலைவாழும் கருணாமூர்த்தியே, நீ
கண்ணீர் துடைப்பாயோ, கனிவு கொடுப்பாயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகியின் வழிதனிலே!

கற்புக்கோர் மகள் கண்ணகி போன்றே,
காலம் முழுவதும் கனிவுடன் வாழ்ந்து.
அற்புதமான அறவழி காத்து
அவனியில் பெண்ணே நீ திகழ்ந்திட வேண்டும்
அற்ப நினைவினை அடியுடன் அறுத்து,
அன்பின் துணையினை அனுதினம் ஏற்று,
நற்புகழ் தேடி நல்லவர் போற்ற
நானிலம் மீதில்நீ வாழ்ந்திட வேண்டும்!

எல்லையே இல்லாத இடர்கள் எல்லாம்,
எதிர்த்தே உன்னைச் சூழ்ந்திட்ட போதும்,
கள்ளையே உண்ட வண்டினம் போலே
கடிதாய் நீயும் மயங்கிட வேண்டாம்!
தொல்லையே இல்லை, சோகமும் இல்லை,
தூயதாய் உந்தன் உள்ளம் இருந்தால்!
கொள்ளையாய் இன்பம் குவிந்துன்னைச் சேர
கொள்கையில் உயர்ந்துநீ விளங்குவாய் பெண்ணே!

அச்சம் முதற்கொண்ட குணங்கள் நான்கும்
அணியும் நகையாய் என்றும் எண்ணி,
மெச்சும் வகையில் பலரும் உன்னை
மேதினி மீதில் வாழ்ந்திடு பெண்ணே!
உச்சி குளிர்ந்து உன்னைப் பெற்றோர்
உயர்ந்த இன்பம் காணும் வகையில்,
சுச்சிதமாக காலங்கள் தோறும்
கண்ணகி வழிதனில் சென்றிடு பெண்ணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் ஒரு......!

கன்னம் குழிகளைக் காட்டும் — அது
கற்பனை எத்தனை ஆயிரம் ஊட்டும்!
பின்னும் நடையது வாட்டும் — மனப்
பித்தில் எண்ணம் பற்பல கூட்டும்!
கண்ணும் கதைபல பேசும் — அதில்
காவியத் தென்றல் கனிந்துவீசும்!
எண்ணும் போதின்பம் சேரும் — அவள்
இணைந்தால் என்நெஞ்சம் ஆறும்!

ஒற்றைக் குழல் கருநாகம் — நல்ல
உவமை குவியும் அவளின் தேகம்!
உற்றுப்பார்க்கில் ஒரு தாகம் — என்
உளளத்தன்னில் அவளொரு பாகம்!
பற்றிப் படர்ந்திட மோகம் — மனம்
பக்குவமாவதில் அவளொரு ராகம்!
முற்றும் துறந்தவர் யாகம் — அவள்
முன்னே சென்றால் கலைந்திடும் யூகம்!

நித்திலம் போலாகும் நங்கை — அந்த
நிலவாம் மங்கைக்கு அவளோ தங்கை!
புத்தியில் பாய்ந்தோடும் கங்கை — இந்த
புவியில் என்றுதருவாள் என்பங்கை!
தத்தியே அலைந்திடும் உள்ளம் — அந்த
தாரகை அருளின் இன்பமோ வெள்ளம்!
சத்தமோ சுவைதரும் வெல்லம் — அவள்
தாவியே நெஞ்சினில் நீந்திடும் வள்ளம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்நாளோ?

வட்டநிலாப் போன்ற, வண்ணமுகங் காட்டி
வட்டமிட் டென்னுள், வளமாகக் கவிபாடும்,
சுட்டும் சுடர்விழியாள், சுந்தரத் தேன்மொழியாள்
திட்டம் இட்டென்னைச் சேரும்நாள் எந்நாளோ!

அந்திவெயில் தன்னில், அரும்புகின்ற ஆசைகளை
முந்தி அவள்வந்து தீர்க்கும்நாள் எந்நாளோ!
முந்திரி போன்றஅவள், சுவையான இதழ்தந்து,
சுந்தரிபோல் என்மனதுள் சுழலும்நாள் எந்நாளோ?

எல்லை இல்லாத என்மனத் துன்பமவள்
சொல்லைக் கேட்டுவிட்டால் தூரச் சென்றுவிடும்!
இல்லை என்னுமல் என்மன மேடையிலே
கொள்ளை இன்பமவள் கொட்டும்நாள் எந்நாளோ!

பூவை நிகர்த்திந்த, புவியினிலே வந்துதித்த
பாவை இனத்தவரின் பார்வையிலும் விளையாடும்.
கோவை இதழாள், கொழிக்கின்ற பேரழகாள்
சேவைசெய்ய என்னைச் சேரும்நாள் எந்நாளோ?

செந்தூர முகமாக, செக்கச் சிவந்தவளாய்
வந்தூற என்மனதுள் வாட்டம் தளர்ந்துவிடும்!
மந்தார மேகத்தின் கரியகுழல் உடையவளோ
என்தாரமாய் என்னைச் சூழும்நாள் எந்நாளோ?

தேனான மொழியில் பிறந்திடும் வார்த்தையெலாம்
மானான விழியின் வழியாக வெளிப்பட்டு
ஊனான என்உடம்பில், உரத்த கதைசொல்ல,
தானாக வந்தென்னுள் தகையும்நாள் எந்நாளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழே நீ என் உயிராகிறாய்!

தமிழே என் தாயுன்னை எனக்கூட்டினாள் — அவள்
தாலாட்டில் நீயெந்தன் உறவாகினாய்!
அமுதாகி, அறிவாகி, அழகாகினாய் — என்றன்
அகமெல்லாம் நீயென்றும் களிப்பூட்டினாய்!

முத்தமிழாய் முருகனிடம் நீ தோன்றினாய் — அன்று
முச்சங்கம் தனில்நின்று நீ ஆடினாய்!
சத்துநிறை உணவைப்போல் சதிராடினாய் — என்றும்
தத்துவம் நிறைந்துண்மை உணர்வூட்டினாய்!

கம்பனின் கையில்நீ கனியாகினாய் — கவி
காள மேகத்தின் துணையாகினாய்!
நண்பனாய்க் கவிஞர்க்கு நீ வாழ்கிறாய் — இள
நங்கைபோல் நீ என்றும் பொலிவாகினாய்!

மூக்கனி தந்திட்ட சுவையாகினாய் — நீ
மூவேந்தர் சபைதன்னில் சுவையூட்டினாய்!
திக்கெலாம் புகழ்க்கொடி நீ நாட்டினாய் — இன்பம்
தேங்கியே நீஎந்தன் துயர் நீக்கினாய்!

வள்ளுவன் குறளுக்கு உரமாகினாய் — அன்று
வான்புகழ் ஔவைக்குச் சரமாகினாய்!
துள்ளுமென் உள்ளத்திற் கொளியாகினாய் — நீ
சொந்தமாய் எனக்கென்றும் விழியாகினாய்!

பாரதிதன் நாவதனில் நீகூடினாய் — அவன்
பக்கபலமாய் நிற்க நீ நாடினாய்!
சேரவரும் எல்லோர்க்கும் இதமாகினாய் — நீ
தேன்போன்ற மழலையிலே பதமாகினாய்!

நாவலரின் நெஞ்சினிலே விரிவாகினாய் — நீ
நக்கீரன் சொல்லிற்கு பரிவாகினாய்!
தாவிவரும் குழந்தையிலே உயர்வாகினாய் — என்
தாய்த்தமிழே நீ எந்தன் உயிராகினாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கறை!

மலர் மலர்வதில் நிலவுக்கு அக்கறை!
மனம் மகிழ்வதில் நினைவுக்கு அக்கறை!
பனி மறைவதில் கதிருக்கு அக்கறை!
பிணி மறைவதில் மருந்துக்கு அக்கறை!
காதல் மலர்வதில் கண்களுக்கு அக்கறை!
கவலை மறைவதில் கவிதைக்கு அக்கறை!
மழை பொழிவதில் முகிலுக்கு அக்கறை!
மமதை அழிவதில் கீதைக்கு அக்கறை!

## ஆனால் —

பசியென்று வந்து பகல் தோறும் கத்தினால்
புசி என்று சொல்ல யாருக்கு அக்கறை!
நாளெல்லாம் உழைத்தும் ஏழ்மையில் துடித்து
நலிந்திடும் மனிதரில் யாருக்கு அக்கறை!

## இன்றோ —

பணம் பல அள்ள, பதுக்கலைச் செய்து
பாரினில் வாழ்ந்திட பாதகருக் கக்கறை!
குணம் பல கெட்டு குடிபல கெடுத்து
குரைப்பதில் தானே குள்ளருக் கக்கறை!
பத்துப் பதினாறு பிள்ளைகளைப் பெற்று
பாரதம் நடாத்த பலருக்கு அக்கறை!
சொத்துச் சுகங்கள் சொகுசாகத் தேட
சோர்ந்து கிடக்கும் சோம்பேறிக் கக்கறை?

## நாளை —

மனிதனில் மனிதன் அக்கறை கொண்டு,
மனத்தினில் சமத்துவ மார்க்கங்கள் கண்டு,
புனிதராய் வாழ்வில் உயர்ந்திடும் போது
புவியினில் இனிமேல் துன்பங்கள் ஏது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் இருக்கின்றான்!

வீட்டில் ஒளிரும ஒளியினிலே,
விளையும் அன்பு மொழியினிலே,
காட்டில் விளையும் கனிகளிலே'
கடலின் முத்து மணிகளிலே,
பாட்டில் நல்ல கருத்தினிலே,
படரும் கொடியின் குருத்தினிலே,
நாட்டில் பொங்கும் நலன்களிலே,
நமது இறைவன் இருக்கின்றான்!

அன்பு பொங்கும் மனத்தினிலே,
அழகு மலரின் இனத்தினிலே.
பண்பு வளரும் உறவினிலே,
பாசம் நிறைந்த உயிரினிலே,
தெம்பு பிறக்கும் கைகளிலே,
தெளிந்த அறிவுப் பொய்கையிலே,
நம்பும் நல்ல மனிதரிலே,
நமது இறைவன் இருக்கின்றான்!

விண்ணில் தெரியும் நிலவினிலே,
வீசும் இளமை அழகினிலே,
மண்ணில் தவழும் மழலையிலே,
மயங்கும் ஓசைக் குழலினிலே,
கண்ணில் தெரியும் காட்சியிலே,
களங்கம் இல்லா ஆட்சியிலே,
பண்ணில் ஆடும் குரலினிலே,
பரிவாய் இறைவன் இருக்கின்றான்!

தினபதி — 1977.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தன் கருணை

கதிர்காமம் வாழும் கந்தன் எழில்காண
கடிதெனவே தொண்டர் படை செல்லும்!
எதிர்நாடும் எங்கள் கொடுமைகளை எல்லாம்
எதிர்த்தே வேலவன் வேல் வெல்லும்!
கதிர்வேலா என்றும், உமைபாலா என்றும்
கரிசனையாய் அடியார் நா சொல்லும்!
எதிர்காலம் என்றும் இன்பமாய் விளங்க
எழும்பகையை கந்தன் அருள் தள்ளும்!

பாடிநிதம் போற்றும் பக்தர்களின் உள்ளம்
பக்குவமாய் என்றும் சிறந்தோங்கும்!
ஆடிவரும் காவடியில், கந்தனெழில் கண்டால்
அனுதினம் எங்கள் துயர் நீங்கும்!
கோடி சுகம்தரவே சோகமெனும் சுமையை
குமரனவன் வேலே தினம் தாங்கும்!
நாடி எமை வந்து, நன்மை பல செய்யும்
நாயகனின் உறவை நல்மனம் வாங்கும்!

மருவும் அடியார்கள் மனக்குறைகள் தீர்க்க
மயில் மீதில் கந்தன் தினம் வருவான்!
பெருகும் துயர் வெள்ளம் நீக்கி இன்பம் சேர்க்க
பேரருளைக் கடம்பன் நிதம் தருவான்!
உருகும் நமதுள்ளம் உவந்து நடம் ஆட
உதிக்கும் இடர்மலையை வேல் உடைக்கும்!
கருகும் கனி வாழ்வை, கடிதெனவே மீட்ட
கந்தனவன் கருணை உடன் கிடைக்கும்!

✲

தினபதி — 1978.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தனைப் போற்றிடுவீர்!

அருவமாயிருந்து அடியார்க்கு அருளும்
ஆறுமுகன் எழில்தன்னைப் பாடிடுவீர் — திருமால்
மருகனும் வள்ளியின் நாயகனைப் போற்றி
மாண்புதரும் வாழ்வதனைத் தேடிடுவீர்!

கோழிக் கொடியோனை, குகனை, சண்முகனை
கூப்பிய கரத்துடனே போற்றிடுவீர் — என்றும்
ஆழிக்கும் பெரிய அன்பினை உடையோனை
அழகுடன் வாழ்த்தி மலர் சாற்றிடுவீர்!

முத்தமிழ் தந்த முருகனிடம் அன்பை
முறையுடன் சென்றே கேட்டிடுவீர் — மனதில்
நித்தமவன் பெயரைச் சுத்தமுடன் சொல்லி
நிம்மதியை வாழ்வினில் கூட்டிடுவீர்!

நாவற்பழம் போட்டு ஔவையினைச் சோதித்த
நாயகனை நாளும் அண்டிடுவீர் — அன்று
தேவர்கள் குறைதீர்த்த செந்தமிழ் மன்னவனை
தேடியே நெஞ்சுருகிச் சென்றிடுவீர்!

பெருமைகள் வழங்கும் பெருமானை வணங்கி
பிறவிப் பெருங்கடலைக் கடந்திடுவீர் — என்றும்
கருணை மழைபொழியும் கடவுளடி தேடி
கவலையறும் வாழ்வினிலே கிடந்திடுவீர்!

காவடிகள் ஆடி, கீர்த்தனைகள் பாடி
கந்தனவன் பேரெழிலைக் கண்டிடுவீர் — வேலன்
சேவடிகள் போற்றி, எழுந்துயரைப் போக்கி
சேமமுடன் வாழ்ந்து புகழ் கொண்டிடுவீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவா உன்
# அருள் வேண்டும்!

சத்தியம் என்றும் நிலைத்திட வேண்டும்
சமத்துவம் வேரூன்றி வளர்ந்திடவேண்டும்
புத்தியாய்ப் புவிதனில் மாந்தர் எல்லாம்
புன்மைகள் களைந்து வாழ்ந்திட வேண்டும்
கத்திடும் கதறிடும் வாழ்க்கை மாறி
கருத்தினில் புதுமை நினைவுகள் ஊறி
எத்திசை பார்க்கினும் இன்ப வெள்ளம்
இனிதாய்ப் பாய்ந்திடும் நிலையதே வேண்டும்!

எனை ஈன்ற நாட்டிலே வறுமை நீங்கி
எந்நாளும் செல்வத்தின் பெருமை ஓங்கி
மனை தோறும் நல்வாழ்வின் மணங்கள் வீசி
மங்களமாய் மக்களெல்லாம் அன்பாய்ப் பேசி
அணைக்கின்ற கரங்களெல்லாம் வலிமை கூடி
அல்லல்கள் துடைக்கின்ற நிலைமை தோன்ற
இணையில்லா திவ்வுலகில் என்றும் வாழும்
இறைவா உன் அருள்தானே என்றும் வேண்டும்!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே சரஸ்வதியே!

வெள்ளை மலர்தனில் வீற்றிருந்தே நாளும்
வீணையை மீட்டுகின்றாய் — அம்மா
கொள்ளை இன்பங்கள் நாம் பெறவே வாழ்வில்
கொடுமையை ஓட்டுகின்றாய்,
எல்லை இல்லா அருள் பொழிந்தே என்றும்
இன்பத்தைக் கூட்டுகின்றாய் — அம்மா
தொல்லை நீக்கி சுடர்கொடுத்தே தெய்வ
சொர்க்கத்தைக் காட்டுகின்றாய்!

கருணை மழையை பொழிந்திருந்தே நீ
கல்வியை ஊட்டுகின்றாய் — அம்மா
பெருமை பெற்றுநாம் உயர்ந்திடவே நாளும்
பேரின்பம் காட்டுகின்றாய்!
பொறுமை கொண்டுநாம் உய்திடவே வாழ்வில்
புத்தறிவாகி நின்றாய் — அம்மா
அருமையான நெறிதந்தே எங்கள்
அல்லலை நீக்குகின்றாய்!

ஆயகலைகள் அனைத்தையுமே வாழ்வில்
அன்பாய் எமக்களிப்பாய் — அம்மா
தூயமனமாய் நாம் திகழ என்றும்
சுடராய் ஒளி கொடுப்பாய்!
தீயகுணத்தை நீக்கி நிற்கும் எங்கள்
தெய்வப் பெருந்தகையே — நாளும்
தாயன்போடு எமைக்காக்கும் எங்கள்
தாயே சரஸ்வதியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லிசைப் பாடல்கள்

## குழந்தை இன்பம்

முத்தாடும் முகம் என்ன முகமோ — முழு
மதியாடும் முகம் தங்க இனமோ!
கொத்தான மலர்தந்த மணமோ — சுகம்
கொடுக்கின்ற மனம் தெய்வ மனமோ?
(முத்தாடும்)

பல்லைக்காட்டிச் சிரிக்கும்போது
பாசம் நெஞ்சில் பெருகுது — குழந்தை
சொல்லைக் கேட்டுச் சுவைக்கும்போது
சொர்க்கம் மண்ணில் தெரியுது!
(முத்தாடும்)

கையைவீசி நடக்கும் போது
கவலை எல்லாம் பறக்குது — குழந்தை
பையப் பையத் தவழும்போது
பாடல் இனிதாய் பிறக்குது!
(முத்தாடும்)

அள்ளி எடுத்து அணைக்கும்போது
அன்பு கோடி மலருது — குழந்தை
சொல்லிச் செய்த சிற்பம் போலே
சுடர் மிகுந்து விளங்குது! (முத்தாடும்)

இசை அமைத்துப் பாடியவர் :
என். இம்மானுவேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம்!

எந்தன் மன ஆழியிலே நீ குளிக்கின்றாய்
உந்தன் மன ஆழியிலே நான் குளிப்பேனோ?
எந்தன் மன ஆசையிலே நீ குவிகின்றாய்
உந்தன் மன ஆசையிலே நான் குவிவேனோ?

(எந்தன்)

செங்கதிரின் ஒளியாய் நீ வருவாயோ
செங்கனியின் சுவையாய் நீ இருப்பாயோ
இங்கிதமாய் இன்பமழை நீ பொழிவாயோ
இங்கிருக்கும் என்னிடம் நீ இரங்கிடுவாயோ!

(எந்தன்)

வீசுகின்ற தென்றலும் வெறுப்பை ஊட்டுது
வெற்றி கொண்ட கண்களும் வெறுமை காட்டுது!
பேசுகின்ற மொழியும் பெயர்ந்தே போகுது
பேராசை உள்ளத்தைப் பிசைந்தே போடுது!

(எந்தன்)

பாடியவர் :
எஸ். விவேகானந்தன்.

இசை அமைப்பு :
ஆர். முத்துசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைத்து வாழு தம்பி!

உழைத்து வாழு தம்பி — உன்னில்
உருளும் உலகு நம்பி!
நிலைத்து வாழ்வாய் தம்பி — நெஞ்சில்
நேர்மை வரின் நிறம்பி!
(உழைத்து)

ஈழம் உனக்கு அன்னை — அவளில்
எறிவாய் உனது கண்ணை!
காலம் மதிக்கும் உன்னை — அதிலே
கரைப்பாய் கவலை தன்னை!
(உழைத்து)

உயரும் உந்தன் ஆசை — இங்கே
உலவும் நல்லோர் பூசை!
துயரம் தீரும் ஓசை — மழலை
தூவும் இனிய பாசை!
(உழைத்து)

அன்பு வாழும் நெஞ்சம் — அதுவே
ஆண்டவனின் மஞ்சம்!
பண்பு வாழ்வில் தஞ்சம் — என்றால்
பாரில் ஏது வஞ்சம்! (உழைத்து)

பாடியவர்:
K. S. பாலச்சந்திரன்.

இசை அமைப்பு:
T. V. பிச்சையப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலை வடிவில் இறைவன்

இறைவன் எந்தன் வீட்டினிலே
இனிதாய் வாழ்கின்றான் – அவன்
மழலைச் செல்வம் வடிவினிலே
மண்ணில் தவழ்கின்றான்!

(இறைவன்)

கையை நீட்டிக் கன்னத்தை
குழந்தை தொடுகிறது – அதில்
மெய்யாய் இந்தப் பூவுலகில்
தெய்வம் தெரிகிறது!

(இறைவன்)

காலால் நெஞ்சை உதைத்தின்ப
கரும்பு சிரிக்கிறது – அதில்
காவல் செய்யும் இறைவனது
கருணை தெரிகிறது!

(இறைவன்)

பொன்னும், பொருளும் இணையில்லா
பிள்ளை வளர்கிறது – அதில்
என்றும் வாழும் இறைவனது
எண்ணம் புரிகிறது! (இறைவன்)

பாடியவர்:
உதயராணி குமாரசிங்கம்.

இசை அமைப்பு:
ஆர். முத்துசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையென்னும் தெய்வம்

அன்னையென்னும் தெய்வம் இங்கிருக்க — சிலர்
ஆண்டவனைத் தேடி அலைகின்றார்.
தன்னையே ஈன்றவள் துடித்திருக்க — சிலர்
தானமும், தர்மமும் செய்கின்றார்!
(அன்னை)

தாய்மையிலே அன்பின் நிலையுண்டு — அவள்
தழுவிடும் போதின்ப உணர்வுண்டு.
தூய்மையாய் உள்ளம் இருந்துவிடின் — நாம்
துதிப்போம் அன்னையை வாழ்விலே!
(அன்னை)

பெற்றவள் பாதம் சொர்க்கமென்றே — தினம்
பெருமையுடன் பாடும் மனம்வேண்டும்:
கற்றவர் சொன்னவை இவையென்றே — நாம்
காசினி போற்றவே வாழவேண்டும்!
(அன்னை)

நேரினில் தோன்றிடும் தெய்வமன்றோ — அன்னை
நிம்மதி வழங்கிடும் வள்ளலன்றோ
பாரினில் தாய்உள்ளம் உயர்ந்ததன்றோ — அன்பு
பாசமெல்லாம் தாயின் பார்வையன்றோ!
(அன்னை)

பாடியவர்:
ச. காசிநாதன்

இசை அமைப்பு:
ஆர். முத்துசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் நீ!

கற்பனைக் கெட்டாத கதை எழுதும் — உன்
கண்களில் எத்தனை கோலமடி!
விற்பனைக்கில்லாமல் என் மனதில் — நீ
வீற்றிருக்கும் இன்பக் கோவிலடி!
(கற்பனை)

உணர்வாய் ஒளியாய் நீ இருந்தாய் — என்
உணர்வில் மகிழ்வாய் நீ பறந்தாய்!
மலர்வாய் இதழால் கவிதந்தாய் — நான்
மகிழ்ந்திருக்க இந்தப் புவிவந்தாய்!
(கற்பனை)

மலரும் மலரினில் வண்டாடும் — என்
மனதிலுன் நினைவுகள் நின்றாடும்!
வளரும் உறவுகள் உண்டாகும் — நீ
வந்துவிட்டால் வாழ்வு நன்றாகும்! (கற்பனை)

பாடியவர் :
V. முத்தழகு.

இசை இமைப்பு:
எம். மோகனதாஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் மகிமை!

தாயின் கருணை தனிக்கருணை — அவள்
தாங்கும் சுமைகள் தனிப்பெருமை!
சேயின் வாழ்வைத் தினம் எண்ணும் — அவள்
சேவைதன்னில் புகழ் மின்னும்!
(தாயின்)

பக்குவ மாகச் சுமந்தெம்மை — இந்த
பாருக்களிக்கும் பெருந்தன்மை!
திக்குகள் எட்டும் ஒளிவீசும் — அவள்
திறமையை என்றும் மொழிபேசும்!
(தாயின்)

நேரினில் காணும் தெய்வமுமாய் — எந்த
நேரமும் இங்கே திகழ்ந்திடுவாள்!
பாரினில் அன்னை நம்தெய்வம் — அவள்
பாசத்தினாலே நாம் உய்வோம்! (தாயின்)

பாடியவர் :
அம்பிகா தாமோதரம்.

இசை அமைப்பு ;
எம். கே. ரொக்சாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பமயம்!

அலையெல்லாம் கடல்மீது ஆடிவரும்
அம்புலியும் விண்வெளியில் ஆடிவரும்!
இலையெல்லாம் தென்றலிலே ஆடிவரும் - என்
இடம் எல்லாம் இன்பங்கள் ஆடிவரும்!
(அலையெல்லாம்)

அளவோடு செல்வங்கள் இரண்டுண்டு
அழகான வாழ்க்கைக்குத் துணையுண்டு!
நிலவோடு விளையாடும் மேகம்போல் - என்
நினைவோடு விளையாடச் சுகம் உண்டு!
(அலையெல்லாம்)

வரவுக்கு உள்ளேதான் செலவுண்டு
வறுமைக்கு அணைபோட வளமுண்டு!
உறவுக்குப் பகைஇல்லா நிலை உண்டு - என்
உள்ளத்தில் அன்பென்னும் பொருள் உண்டு!
(அலையெல்லாம்)

நாள்தோறும் உழைக்கின்ற நினைவுண்டு
நாட்டிலே வளம்பொங்கும் நிலையுண்டு!
வாழ்கின்ற யாபேரும் ஒன்றென்னும் - நல்ல
வளமான சொல்லொன்றும் நினைவுண்டு!
(அலையெல்லாம்)

பாடியவர் :
என். இம்மானுவேல்.

இசை அமைப்பு :
ஆர். முத்துசாமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் துணை!

முதுமை அடைந்தாலும்
முருகன் துணை என்று
நாளும் நான் பாடுவேன் - என்
நாவில் சுவை தேடுவேன்!

(முதுமை)

புள்ளி மயிலேறி வள்ளி மணவாளன்
அள்ளிவருவான் இன்பம், அருள் சேர்க்க!
எள்ளி நகையாடும் ஈனர்களின் வாழ்வை
கிள்ளிவிடுவான் எங்கும் குறை தீர்க்க!

(முதுமை)

கொஞ்சி விளையாடும் குழந்தையைப் போலே
நெஞ்சமெலாம் குமரன் மலர்ந்திருப்பான்!
அஞ்சியஞ்சி யோடும் அல்லலேதும் வந்தால்
தஞ்சம் என வேலன் வரம் தருவான்!

(முதுமை)

கதிர்காமம் என்னும் பதிதன்னில் வாழும்
கதிர்வேலனால் நெஞ்சின் இருள் மாயுமே!
எதிர்நாடும் இன்னல் எமைவிட்டு ஓடும்
எதிர்காலமே இன்ப மயமாகுமே! (முதுமை)

பாடியவர் :
சுஜாதா அத்தநாயக்க.

இசை அமைப்பு :
T. V. பிச்சையப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமலர் தந்த ஆறுமுகா!

ஆறுமலர் தந்த ஆறுமுகா
அன்பில் விளையாடும் அழகுமுகா
ஆறுதல் தந்திடு ஆசைமுகா - கொடும்
ஆவலை அகற்றிடு அறிவுமுகா!
(ஆறுமலர்)

மண்டூர் வாழ்கின்ற மால்மருகா
மயிலேறி என்னில்லம் வாமுருகா
கண்டூர் மக்களும் களித்திடவே
காட்சிகள் தந்திடு வேல்முருகா!
(ஆறுமலர்)

செய்யும் செயல்யாவும் நீ அறிவாய்
சிந்தையில் இன்பம் நீ புரிவாய்
உய்யும் வழிபல தந்துவிடு
உள்ளமெல்லாம் நீ அமர்ந்துவிடு!
(ஆறுமலர்)

வள்ளி தெய்வானை உன் அருகில்
வாஞ்சையுடன் வந்து வீற்றிருந்தால்
துள்ளி எந்தன் மனம் ஓடிவரும்
தூய நெறியாவும் தேடிவரும்!
(ஆறுமலர்)


பாடியவர்:
என். இம்மானுவேல்.

இசை அமைப்பு:
ஆர். முத்துசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்



''மீன்பாடும் தேன்நாடு'' என வர்ணிக்கப்படுகின்ற, மட்டக்களப்பின் தென்பாலமைந்த, அக்கரைப்பற்றிலே, கணபதிப்பிள்ளை – கண்ணகை தம்பதிகளின் இரண்டாவது மகனாக 8-9-1951ம் ஆண்டு பிறந்த கவிஞர் அக்கரைப் பாக்கியனின் இயற்பெயர் க. பாக்கியராசா ஆகும். இவர் அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

சுதந்திரன் வாயிலாக ''அணங்கே கழற்றி எறி'' என்னும் கவிதைமூலம் 1971ம் ஆண்டு அறிமுகமான இவர் தற்பொழுது ஈழத்தின் பல பத்திரிகைகளிலும் எழுதிவருகின்றார். கட்டுரை, நாடகம் போன்றவற்றிலும் அக்கறை மிகுந்தவர். இவரது நாடகங்கள் பல அரங்கேறி, மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன.

இலங்கை வானொலி நிகழ்ச்சிகளிலும் இவர் அதிகமாகப் பங்குகொண்டு வருகின்றார். இவரது கவிதைகள் பல, இலங்கை வானொலியின் பல நிகழ்ச்சிகளிலும் ஒலிபரப்பாகியுள்ளன. இவரது மெல்லிசைப் பாடல்களும், அடிக்கடி இலங்கை வானொலியிலே ஒலிபரப்பாகிவருகின்றன. பல கவி அரங்குகளிலும் பங்குபற்றி இருக்கின்றார்.

தமிழே தனது, உணர்வாய் - உயிராய் - வாழ்வாய்க் கொண்டு வளர்ந்துவரும் இவர், கவிதை உலகிற்குக் கிடைத்த நல்லதொரு எழுத்தாளராவார்.

கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org